**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.500/2018**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 6 |
| Name (திரு/திருமதி) | : | சின்னபையன் |
| Father's Name/ Husband's Name | : | மொட்டையன் |
| Village & Taluk | : | கோட்டபூண்டி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 66 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 திருமலை என்பவரையும், ஆஜர் எதிரியை தெரியும். அவர்கள் இருவரும் என் உறவினர்கள் ஆவார்கள். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சண்டையை நேரில் பார்க்கவில்லை. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 திருமலை என்பவரும் ஆஜர் எதிரியும் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் நிலம்சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். கடந்த 14.09.2017 இரவு 9.00 மணிக்கு அ.சா.1 திருமலை அவரது வீட்டின் எதிரே இருக்கும்போது ஆஜர் எதிரி அவரை தகாத வார்த்தைகளால் திட்டி தடியால், பேனா கத்தியால் தாடையை கிழித்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் நடந்த சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு அதனை காவலர்கள் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/- B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.